# Winmeen - Group 4 VAO General Tamil Model Test 13

1. "காலையில் கடிநகர் கடந்து நமது
வேலை முடிக்குதும், வேண்டின் விரைவாய்
இன்று இரா முடிக்கினும் முடியும்; "
இது யாருடைய கூற்று?
A) சுந்தர முனிவர் B) நடராஜன்
C) சுந்தரனார் D) சலீம் அகமது

2. இலக்கணக் குறிப்புத் தருக.
கடிநகர், சாலத் தகும்
A) வினைச்சொற்றொடர்கள் B) உரிச்சொற்றொடர்கள்
C) வினைத் தொகைகள் D) பண்புத்தொகைகள்

3. சிறுபான்மையிலும் சிறுபான்மையினராக வாழும் திருநங்கைகளுக்கு மட்டுமே இருக்கும் தடைக்கற்களையும் கூடப் படிக்கட்டுகளாக மாற்றலாம் என்று உலகுக்குக் காட்டியவர் யார் ?
A) நர்த்தகி நடராஜ் B) சுந்தரனார்
C) ஜீவா D) செல்வி

4. "ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை" என்று ____ கூறுகிறது.
A) அகத்திய ஞானம் B) தொல்காப்பிய ஞானம்
C) திருக்குறள் D) திருமந்திரம்

5. கீழ்க்கண்ட கூற்றுகளில் எது தவறானது ?
A) தன்னை அறிந்த நிலையில் ஆன்மா தானே தனக்குத் தலைவனாய் நிற்கும் என்பது தொல்காப்பியர் வாக்கு.
B) தன்னை அறிவதற்கு 'நான்' என்னும் அகங்காரம் அழிய வேண்டும்.
C) அண்டத்தில் உள்ளது பிண்டம்; பிண்டத்தில் உள்ளது அண்டம் என்பது சித்தர் மொழி
D) நாடிகளைப் பிடித்து நோய் அறியும் திறன் பெற்ற சித்தர்கள் மருந்து தயாரிக்கும் வேதியியல் கூறுகளையும் அறிந்திருந்தனர்.

6. கீழ்க்கண்டவற்றுள் அட்டமா சித்திகளில் அல்லாதது எது?
A) வசித்துவம் B) காமாவசாயித்வம்
C) மகிமாவசித்வம் D) ஈசத்துவம்

7. "சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப் படுத்தி
நெர்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறைஉழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?"
இப்பாடலில் பயின்று வந்துள்ள பாவகை?
A) வெண்பா B) ஆசிரியப்பா
C) அறுசீர் கழிநெடிலடி ஆசிய விருத்தம் D) எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

8. சரியான பொருளைத் தேர்ந்தெடு.

    ஒதுக, முழக்கம்

    A) கேட்டல், சத்தம்    B) சொல்க, ஓங்கி உரைத்தல்

    C) கேட்டல், ஒலி    D) ஒலி, ஒளி

9. "Hues and harmonies from an ancient land" என்னும் சங்க இலக்கிய மொழிபெயர்ப்பை வெளியிட்டவர் யார்?

    A) ம.லெ.தங்கப்பா    B) ஏ.கே.ராமானுஜம்

    C) ஆல்பர்காம்யு    D) பிரம்மராஜன்

10. நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோவில்களிலேயே பெரியதும் உயரமானதுமான கோயில் எது?

    A) மகாபலிபுரம் கடற்கரைக் கோவில்    B) பனைமலைக் கோயில்

    C) தஞ்சைப் பெரியக் கோயில்    D) காஞ்சி கைலாசநாதர் கோயில்

11. இராசசிம்மேச்சுரம் என்று அழைக்கப்பட்ட கோவில் எது?

    A) மகாபலிபுரம் கடற்கரைக் கோவில்    B) பனைமலைக் கோயில்

    C) தஞ்சைப் பெரியக் கோயில்    D) காஞ்சி கைலாசநாதர் கோயில்

12. இராசராசனின் பட்டத்தரசி ஒலோகமாதேவி கட்டிய ஒலோகமாதேவீச்சுரம் எங்கு காணப்படுகிறது.

    A) தஞ்சாவூர்    B) சிதம்பரம்

    C) கும்பகோணம்    D) திருவையாறு

13. முகலாய மன்னர்களில் யாருடைய காலத்தில் நாட்குறிப்பு எழுதும் வழக்கம் தடை செய்யப்பட்டது

    A) அக்பர்    B) பாபர்    C) ஷாஜகான்    D) ஔரங்கசீப்

14. ஆனந்தரங்கரின் நாட் குறிப்பு முடிவடையும் நாள்

    A) 11.01.1671    B) 11.01.1761

    C) 01.11.1671    D) 01.11.1761

15. "சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலால்

    புதுமலர்த் தெருத்தொறும் சிந்திப் பொங்கலால் "

    - இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்

    A) சிலப்பதிகாரம்    B) மணிமேகலை

    C) சீறாப்புராணம்    D) முதுமொழிமாலை

16. "சங்க காலத் தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக, பயிற்று மொழியாக, இலக்கிய மொழியாக விளங்கியுள்ளது" என்ற கருத்தை கூறியவர்

    A) திரு.வி.க    B) அண்ணா

    C) ராஜாஜி    D) மா.இராசமாணிக்கனார்

17. ஐந்தாக விரிக்கப்பட்ட மூவகை இலக்கணத்தையும் அவற்றுக்கு எடுத்துக்காட்டான பேரிலக்கியங்களையும் கற்பிப்போர் ___.

    A) ஆசிரியர்    B) கணக்காயர்

    C) குரவர்    D) சான்றோர்

18. தாமஸ் மன்றோ காலத்தில் சென்னை மாகாணத்தில் எத்தனை திண்ணைப் பள்ளிகள் இயங்கி வந்தன

A) 12,894 B) 14,298 C) 14,892 D) 12, 498

19. எதிர்காலத்தில் நம் மூளையின் பல செயல்பாடுகளை ____ மூலம் செய்யலாம் .

A) இரும்பு சில்லுகள்
B) சில்வர் சில்லுகள்
C) சிலிக்கன் சில்லுகள்
D) சிலிக்கன் அட்டைகள்

20. ஒரு நிமிடத்திற்கு மூளைக்குத் தேவைப்படும் குறுதியின் அளவு

A) 80 மில்லி
B) 8000 மில்லி
C) 8 மில்லி
D) 800 மில்லி

21. கற்பதனால் மூளையில் ஏற்படும் மாறுதல்களில் தவறானது

A) நியுரானில் உள்ள புரோட்டீன் அளவு அதிகரிக்கிறது
B) நியுரோ டிரான்ஸ்மிட்டர்களை கட்டுப்படுத்தும் வினையூக்கி அளவு அதிகமாகிறது.
C) பெப்டைட் என்னும் சங்கதி குறைகிறது.
D) கற்க கற்க மூளையின் எடை கொஞ்சம் கூடுகிறது.

22. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையை கண்டறி

1.மலை - ஜவுன் பூர் (உத்திரப் பிரதேசம்)
2. வரை – தாணே (மஹாராஷ்ட்ரா)
3. மலா - வல்ஸட் (குஜராத்)

A) அனைத்தும் சரி
B) 1, 3 சரி
C) 1 , 2 சரி
D) 1, 2 தவறு

23. _____ மாநிலத்தில் பத்து மலை விகுதி இடப்பெயர்கள் உள்ளன.

A) கேரளா
B) தமிழ்நாடு
C) ஆந்திரா
D) கர்நாடகா

24. கர்நாடகத்தில் மலையை குறிக்கும் 'மலே' என்ற சொல் _____ இடப்பெயர்களில் இடம்பெறுகிறது.

A) 17 B) 48 C) 51 D) 15

25. ஜெர்மனி மொழியில் ஆண்பால், பெண்பால், பொதுப்பால் என்பவை முறையே எந்த உறுப்புகளாக பாகுபடுத்தப்படுகின்றன.

A) கால் விரல்கள், கை விரல்கள், தலை
B) கை விரல்கள், கால் விரல்கள், தலை
C) வாய், மூக்கு, கண்
D) மூக்கு, வாய், கண்

26. " கெண் " என்ற அடிச்சொல் எந்த திராவிட மொழியை சார்ந்தது?

A) தோடா
B) குருக்
C) பர்ஜி
D) குடகு

27. மணற் பாங்கான இடத்தில் தோண்டி சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு _____ என்று பெயர்.

A) கண்மாய்
B) உறைக்கிணறு
C) ஊருணி
D) குளம்

28. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது ?

A) அருவி - மலை முகட்டுத் தேக்க நீர் குத்திட்டு குதிப்பது.

B) ஆழிக்கிணறு - கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு

C) குண்டு - தேக்கப்பட்ட பெரிய நீர்நிலை

D) ஆறு -பெருகி ஓடும் நதி

29. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | Payment terminal | i) கட்டணம் செலுத்தும் கருவி |
| 2. | Point of Sale terminal | ii) விற்பனைக்கருவி |
| 3. | Smart card | iii) ஆளறி சோதனைக் கருவி |
| 4. | Biometric device | iv) திறன் அட்டை |

| | | | | |
|---|---|---|---|---|
| A) | i | ii | iv | iii |
| B) | ii | iii | i | iv |
| C) | ii | i | iv | iii |
| D) | iv | iii | ii | i |

30. " ஏவுகணையிலும் தமிழை எழுதி எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள் " என்ற வரிகள் யாருடையது ?

A) கண்ணதாசன் B) வைரமுத்து

C) வாலி D) தமிழ்ஒளி

31. மறைமலை அடிகளின் மகள் நீலாம்பிகை அம்மையாரின் காலம்

A) 1903 – 1943 B) 1913 – 1933

C) 1903 - 1953 D) 1913 – 1953

32. குடும்ப விளக்கு என்னும் நூல் எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது ?

A) 2 B) 3 C) 4 D) 5

33. கொற்கை துறைமுகத்தில் செல்வர் ஏறி வரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக் கொள்ளும் அளவிற்கு கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்ததாக கூறும் நூல்

A) புறநானூறு B) அகநானூறு

C) சிலப்பதிகாரம் D) பட்டினப்பாலை

34. சரியான பொருளை தேர்ந்தெடு

புரிசை, பணை

A) மதில், பனைமரம் B) சாளரம், பனைமரம்

C) நீர்நிலை, சாளரம் D) மதில், முரசு

35. 2 ம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோயில் அமைந்துள்ள இடம்

A) நார்த்தாமலை – புதுக்கோட்டை B) சீனிவாசநல்லூர் – திருச்சி

C) கொடும்பாளூர் – புதுக்கோட்டை D) திருவரங்கம் – திருச்சி

36. திரிபுவன வீரேசுவரம் கோயிலை அமைத்தவர் யார் ?

A) 2ம் குலோத்துங்கன் B) முதலாம் குலோத்துங்கன்

C) 2ம் இராசராசன் D) 2ம் பராந்தகன்

37. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. பந்தர் பெயரிய பேரிசை மூதூர் – பாடல் 67, அடி 2
2. பந்தர் பயந்த பலர்புகழ் முத்தம் - பாடல் 74 , அடி 6
3. நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர் – பாடல் 55 , அடி 4

A) 3 மட்டும் சரி B) 3 மட்டும் தவறு

C) அனைத்தும் சரி D) அனைத்தும் தவறு

38. பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் துறந்த பின் அறியணை ஏறியவர் யார்?

A) அதிவீரராம பாண்டியன் B) சடையவர்மன் வீரபாண்டியன்

C) வீரகேசரி D) வெற்றிவேற்செழியன்

39. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக – வேண்டி

A) வேண்+டி B) வேண்டு+ட்+இ

C) வேண்டு+இ D) வேண்+டு+இ

40. 'இன்மை' என்று எதையும் புறக்கணிக்க வேண்டாம் என்பது யாருடைய கருத்து?

A) ஜென் B) லாவோட்சு

C) தாவோ D) லாமார்க்

41. பண்டைக்கால தருமசாத்திர நூல்களில் ____ மலைகளுக்கு இடையே உள்ள நிலப்பரப்பு கருமபூமியாக கருதப்பட்டது.

A) பஃருளி மலை B) விந்திய, சாத்பூரா

C) சாத்பூரா, இமயமலை D) விந்தியமலை, இமயமலை

42. மக்கள் அனைவரும் மக்கட் தன்மையை வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் எது?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை

C) தொல்காப்பியம் D) திருக்குறள்

43. கோவலன் ,கண்ணகி , மாதவி , மணிமேகலை முதலானோர் ____ ஆட்சிக் காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தனர் .

A) நலங்கிள்ளி B) நெடுங்கிள்ளி

B) கிள்ளிவளவன் D) நெடுஞ்செழியன்

44. சோழ நாட்டு வணிகர்கள் வணிகம் செய்த இடங்கள் எவை ?

A) சாவக நாடு ,காழகம், கங்கை துறைமுகம் B) எகிப்து , காழகம், கங்கை துறைமுகம்

C) சீனா , காழகம், எகிப்து D) சீனா , காழகம் , கங்கை துறைமுகம்

45. கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள் , கோவிலின் தரைப்பகுதி , சுவர்களின் வெளிப்புறங்களில் காணப்படும் சிற்பங்கள் ____ .

A) புடைப்புச் சிற்பங்கள் B) முழு உருவச் சிற்பங்கள்.

C) பிரதிமை D) தெய்வசிற்பங்கள்

46. உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் பொருந்தாதது எது ?

A) சுவாமிமலை B) மாமல்லபுரம்

C) மதுரை D) கும்பகோணம்

47. கீழ்க்கண்டவற்றுள் எவை இல்லறத்தாரின் கடமைகளாக இருந்தன .

1. விருந்தோம்பல் 2. சுற்றம் தழுவல்
3. வறியோர் துயர் துடைத்தல் 4. கடவுளை வழிபடுதல்

A) அனைத்தும் சரி B) 1, 2 ,4 சரி
C) 1 , 3, 4 சரி D) 1, 2, 3 சரி

48. “ சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார் “
இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை
C) சீவக சிந்தாமணி D) வளையாபதி

49. "இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய் .விவசாயத்தின் வசந்த காலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும் “ என்று கூறியவர்

A) மசானபு ஃபுகோகா B) நம்மாழ்வார்
C) கம்பர் D) திருவள்ளுவர்

50. இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சிகளையும், வழிமுறைகளையும் அரசு எதன் மூலம் நடைமுறைப் படுத்துகிறது.

A) கூட்டுறவு வங்கி B) பேரூராட்சி அலுவலகம்
C) கிராம அலுவலர் D) வேளாண்மை அலுவலகம்

51. குறுகினன் - சரியாக பிரித்தெழுதுக

A) குறு + இன் + அன் B) குறுகி + இன் + அன்
C) குறுகு + இன் + அன் D) குறுக்கி + இன் + அன்

52. உவம உருபு பயின்று வராத தொடரைத் தேர்வு செய்க

A) முழவு உறழ் தடக்கை B) தாய் போல் பேசும் மக்கள்
C) மான் மருளும் D) வேய்புரை தோள்

53. அகர வரிசையில் அமைந்துள்ள சொற்களைக் கண்டறிக

A) சார்பு, சிறுகதை, சூடாமணி, செவ்வாழை, சோளம்
B) செவ்வாழை, சோளம், சிறுகதை, சார்பு, சூடாமணி
C) சிறுகதை, சூடாமணி, சிறுகதை, சோளம், சார்பு
D) சிறுகதை, சார்பு, சோளம், செவ்வாழை, சூடாமணி

54. கோடிட்ட எழுத்துகள் குறிக்கும் தொடை வகை எது?
அளவில்சனம் உளமனைய குளம் நிறைந்த வளமருவும்

A) எதுகை தொடை B) இயைபு தொடை
C) முரண் தொடை D) மோனை தொடை

55. நாறுவ என்னும் சொல் தரும் பொருள்

A) மூத்த B) முளைப்ப
C) நறுமணம் D) கெடாமல்

56. "நல்லிகைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்தும் மேம்படத் தக்கோன்” – என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) மலைபடுகடாம் B) மதுரைக் காஞ்சி
C) முல்லைப்பாட்டு D) பட்டினப்பாலை

57. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் திருநாவுக்கரசர் பாடியது

A) நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகள் B) ஐந்து, ஆறு, ஏழு திருமுறைகள்

C) முதல் ஆறு திருமுறைகள் D) ஒன்று, இரண்டு, மூன்று திருமுறைகள்

58. கீழ்க்கண்டவற்றுள் சரியானதை தேர்ந்தெடு

1. உவமைக் கவிஞர் சுரதாவின் இயற்பெயர் தி.இராசகோபாலன்

2. இவர் பழையனூரில் பிறந்தார்

3. துறைமுகம்,சுவரும் சுண்ணாம்பும், முதலிய சிறுகதை நூல்களை இயற்றியுள்ளார்.

4. தேன்மழை என்னும் கவிதை நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றது.

A) 1, 4 சரி B) 1 , 3, 4 சரி

C) 1, 2, 4 சரி D) அனைத்தும் சரி

59. பல்லவர் கால சிற்பிகள் எவ்வகை உருவங்களை செதுக்குவதில் கைதேர்ந்திருந்தனர்

A) குதிரை B) யானை

C) கடவுள் D) மனிதன்

60. ஜி.யு.போப் கி.பி. 1820 ஆம் ஆண்டு ____ஆம் நாள் பிறந்தார்

A) ஏப்ரல் 24 B) நவம்பர் 17

C) பிப்ரவரி 18 D) ஆகஸ்ட் 23

61. சந்தி பிழையற்ற தொடரைக் கண்டறிக

A) தமிழில் வரலாற்று கருத்துக்களையும் பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்

B) தமிழில் வரலாற்றுக் கருத்துக்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்

C) தமிழில் வரலாற்றுக் கருத்துகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் காண முடியும்

D) தமிழில் வரலாற்றுக் கருத்துக்களையும் பண்பாட்டு கூறுகளையும் காண முடியும்

62. ஒருமைப் பன்மை பினழயற்ற தொடரைத் தேர்க

A) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழிகளாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது.

B) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழியாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது.

C) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழிகளாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளன.

D) தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம்மொழியாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது.

63. இகல் வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் _____ பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடு

A) படை B) பொழுது

C) செல்வம் D) பகை

64. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு – இதில் வேளாண்மை என்னும் சொல் தரும் பொருள்

A) உழவு செய்தல் B) பயிர் செய்தல்

C) விளைவித்தல் D) உதவி செய்தல்

65. துன்பம் உண்டாயின் அதனையடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை – என்ற பொருள் தரும் வரிகள் அமைந்த நூல்

A) தேம்பாவணி B) கம்பராமாயணம்

C) சீவக சிந்தாமணி D) மணிமேகலை

66. "கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" – இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது?

A) குறுந்தொகை B) நற்றிணை

C) அகநானூறு D) புறநானூறு

67. "உடல் வாடினாலும் பசி மீறினாலும் – வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம்" என்று பாடியவர்

A) வாணிதாசன் B) சுரதா

C) தாராபாரதி D) பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

68. சுமார் எண்ணூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த தாராசுரம் ஐராவதீசுவரர் கோவிலை கட்டியவர் யார்?

A) முதலாம் இராசராச சோழன் B) இரண்டாம் இராசராச சோழன்

C) முதலாம் இராசேந்திரன் D) இரண்டாம் இராசேந்திரன்

69. பாமர மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சமுதாயப்பாடல்களை எழுதிச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பியவர் யார்?

A) வாணிதாசன் B) சுரதா

C) உடுமலை நாராயணக்கவி D) பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

70. திரைக் கவி திலகம் மருதகாசி அவர்கள் வாழ்ந்த காலம்

A) 1930 - 1989 B) 1933 – 1989

C) 1920 – 1998 D) 1920 – 1989

71. ந. பிச்சமூர்த்தி அவர்கள் கோவில் நிருவாக அலுவலராக பணியாற்றிய காலம்

A) 1924-1938 B) 1925-1937

C) 1938-1954 D) 1937-1953

72. " துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம் சுவை சொட்டும் சந்த நயம் தோய்ந்திருக்கும்" என்று சங்கரதாசு சுவாமிகளை புகழ்ந்தவர் யார்?

A) வ.வே.சு B) திரு.வி.க

C) அண்ணா D) புத்தனேரி சுப்ரமணியம்

73. தவறான மரபுச்சொல்லைத் தேர்ந்தெடு

A) அப்பம் தின் B) பழம் சாப்பிடு

C) உணவு உண் D) மலர் கொய்

74. கீழ்க்கண்ட எந்த புதினத்திற்காக அழகிய பெரியவன் தமிழக அரசின் விருதைப் பெற்றார்.

A) தகப்பன் B) தகப்பன் பாசம்

C) தகப்பன் கொடி D) தகப்பன் மலர்

75. மகேந்திரவர்ம பல்லவன் மத்தவிலாசம் என்ற நாடக நூலை எந்நூற்றாண்டில் இயற்றினார்

A) 6ம் நூற்றாண்டு B) 7ம் நூற்றாண்டு

C) 8ம் நூற்றாண்டு D) 9ம் நூற்றாண்டு

76. புலமைக்கடலான தமிழ் மூதாட்டி ஔவையார் நாடகம் மதுரையில் அரங்கேறிய ஆண்டு

A) 1941 B) 1942 C) 1943 D) 1944

77. ஞாயிற்றைச் சுற்றிய பாதையை ஞாயிறு வட்டம் என பழந்தமிழர் கூறினர் என கூறும் நூல்
A) புறநானூறு B) தொல்காப்பியம்
C) திருக்குறள் D) சிலப்பதிகாரம்

78. ஓர் அடியுள் முதல், இரண்டு, நான்காம், சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது
A) மேற்க்கதுவாய் எதுகை B) கீழ்க்கதுவாய் எதுகை
C) முற்றெதுகை D) கூழை எதுகை

79. தவறான இணையைத் தேர்ந்தெடு
A) மா முன் நிரையும், விள முன் நேரும் வருவது இயற்சீர் வெண்டளை
B) காய் முன் நிரைவருவது ஒன்றிய வஞ்சித்தளை
C) காய் முன் நேர் வருவது வெண்சீர் வெண்டளை
D) விளம்முன் நிரைவருவது நிரையொன்றாசிரியத் தளை

80. யார் தலைமையில் மங்கம்மாள் அனுப்பிய படை திருவிதாங்கூர் படையைத் தோற்கடித்துத் திறைப் பொருள் மற்றும் பொன், பீரங்கி முதலிய பொருள்களை பெற்றுத் திரும்பியது.
A) இரவிவர்மா B) நரசப்பையன்
C) ஷாஜி D) பாலாஜி பண்டிதர்

81. தென்னாப்பிரிக்க வரலாற்றில் வள்ளியம்மையின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும் என்று காந்தியடிகள் _____ நூலில் குறிப்பிட்டுள்ளார்.
A) இந்தியன் ஒப்பீனியன் B) தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகம்
C) உப்புச் சத்தியாகிரகம் D) இந்தியன் சஞ்சிகை

82. எம்.ஜி.ஆர் சென்னை மாநிலச் சட்ட மன்ற உறுப்பினரான ஆண்டு
A) 1963 B) 1967 C) 1968 D) 1969

83. "புத்திக்குள் உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந் துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக் கேள்"
இப்பாடலை இயற்றியவர்
A) பாரதிதாசன் B) உடுமலை நாராயணக் கவி
C) கம்பர் D) ஆசிரியர் பெயர் தெரியவில்லை

84. "திங்களொடும் செழும் பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள் " என்று பாடியவர் யார் ?
A) பாரதியார் B) பாரதிதாசன்
C) கண்ணதாசன் D) நாமக்கல் கவிஞர்

85. தவறான இணையைத் தேர்ந்தெடு
A) தமிழ்கெழு கூடல் – புறநானூறு
B) தமிழ்வேலி – பரிபாடல்
C) கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழ் – மணிவாசகம்
D) பண்ணொடு தமிழொப்பாய் – திருவாசகம்

86. கீழ்க்கண்டவற்றுள் வல்லினம் மிகும் இடங்களில் தவறானது எது?
A) இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்
B) நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்

C) ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சத்தின் பின் வல்லினம் மிகும்

D) வன்தொடர் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

87. "வேடத்தால் குறையாது முந்நூல் ஆக
வெஞ்சிலை நாண் மடித்திட்டு விதியாற் கங்கை
ஆடப்போந்தகப்பட்டேம் கரந்தேம் "
என்ற வரிகள் இடம்பெறும் நூல்

A) அழகர் கிள்ளை விடு தூது B) கலிங்கத்துப்பரணி

C) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் D) பெத்தலகேம் குறவஞ்சி

88. தவறான இணையைத் தேர்ந்தெடு

A) எந்நாளோ - பாரதிதாசன்

B) பூக்கட்டும் புதுமை – முடியரசன்

C) விடுதலை விளைத்த உரிமை – ந. கருணாநிதி

D) தளை – சிற்பி பாலசுப்பிரமணியம்

89. சரியான இணையைத் தேர்ந்தெடு

A) வேலி – செயப்பிரகாசம்

B) கிழிசல் – வண்ணதாசன்

C) மூக்கப் பிள்ளை வீட்டு விருந்து – வல்லிக்கண்ணன்

D) பழிக்குப்பழி – சேதுபதி

90. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை

A) 4 - 8 அடி B) 9 - 12 அடி

C) 13 - 31 அடி D) 3 – 4 அடி

91. கூதிர் காலத்திற்குரிய தமிழ் மாதங்கள் எவை?

A) ஆவணி, புரட்டாசி B) ஐப்பசி, கார்த்திகை

C) மார்கழி, தை D) மாசி, பங்குனி

92. "மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை
அன்புடை மரபினின் கிளையோ டாரப்
பச்சூன் பெய்த பைந்நிண வல்சி"
என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல்

A) அகநானூறு B) புறநானூறு

C) ஐங்குறுநூறு D) குறுந்தொகை

93. " மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக்கூடாது – பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக் கூடாது"
என்ற வரிகள் யாருடையது?

A) தாராபாரதி B) நாமக்கல் கவிஞர்

C) கவிமணி D) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

94. கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் எப்போது அமைக்கப்பட்டது?

A) 01.02.2000 B) 02.10.2000

C) 10.02.2000 D) 20.10.2000

95. காமராசரைக் கல்விக் கண் திறந்தவர் என்று பாராட்டியவர் யார்?

A) அண்ணா B) திரு.வி.க

C) கல்கி D) பெரியார்

96. அண்ணா நூற்றாண்டு நூலகம் குறித்த செய்திகளில் தவறானது எது?

A) முதல் தளம் - குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள்

B) மூன்றாம் தளம் - பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி

C) ஏழாம் தளம் - வரலாறு, சுற்றுலா

D) ஐந்தாம் தளம் -கணிதம், அறிவியல், மருத்துவம்

97. அறுவடைத் திருநாளை மகர சங்கராந்தி என்று கொண்டாடும் மாநிலங்களில் தவறானது எது

A) ஆந்திரா B) கர்நாடகா

C) மகாராட்டிரா D) ஒடிசா

98. நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் பிறக்கும் எழுத்து

A) ந B) ன C) ண D) ழ

99. "உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை

நில்லாது நீங்கி விடும் " – இக்குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம்

A) ஊக்கமுடைமை B) பயனில சொல்லாமை

C) கள்ளாமை D) விருந்தோம்பல்

100. “அஞ்சாமை மிக்கவன் தான் ஆனாலும் சான்றோர்கள்

அஞ்சுவதை அஞ்சி அகற்றி விலக்கிடுவான்"

என்று பாடியவர்

A) கண்ணதாசன் B) வைரமுத்து

C) முடியரசன் D) கவிமணி

winmeen.com

# Group 4 VAO General Tamil Model Test 13 – Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | B | A | D | A | C | D | B | A | C |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| D | D | D | B | C | D | C | D | C | D |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| C | C | A | D | C | C | B | C | A | B |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| A | D | B | D | C | A | C | D | C | B |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| D | D | B | A | A | B | D | C | A | D |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| C | C | A | A | B | A | A | C | B | A |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| B | B | B | D | B | A | D | B | C | D |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| C | D | B | C | B | B | A | B | B | B |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| B | A | D | B | D | C | A | C | C | C |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| B | C | D | B | D | B | D | C | A | C |